## JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU

## CC No. 159/2023

## DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)

*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 7 |
| Name | : திரு. தூயவன் |
| Father/Husband's Name | : குருசாமி |
| Village | : பாலூர் |
| Taluk | : செங்கல்பட்டு |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2024.

Accused present.

**முதல் விசாரணை-**

நான் தற்போது பாலூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். சாட்சியிடம் பார்வை மகசர் காட்டப்பட்ட போது அதில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது என்று கூறினார். மேற்படி கையொப்பத்தை நான் விபத்து நடந்த இடத்தில் போட்டேன். விபத்தானது 31.12.2022 அன்று 01.45 மணிக்கு விபத்து ஏற்பட்டது. போலிசார் அங்கு படம் வரைந்தார்கள். நான் போலிசார் படம் வரையும் போது 05.30 மணிக்கு கையொப்பம் செய்தேன். விபத்து எந்த இடத்தில் நடந்தது என்று கேட்டால் மோகன்ராஜ் விவசாயம் நிலம் உள்ள இடத்தில் ரோட்டில் நடந்தது. என்னுடன் சதீஷ் என்பவரும் கையொப்பம் போட்டார். **(மேற்படி பார்வை மகசர் அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-**

போலிசார் சம்பவயிடத்தில் விசாரித்தது அல்லாமல் வேறு எங்காவது விசாரித்தார்களா என்றால் சம்பவயிடத்தில் மட்டும் தான் விசாரித்தார்கள். போலிசார் நான் கொடுத்த வாக்குமூலத்தில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் சாட்சி முதலில் ஆம் என்று கூறிவிட்டு பின்னர் இல்லையென்று கூறுகிறார். என்னுடைய வாக்குமூலத்தை எழுதியர் எந்த நிலை அதிகாரி என்று கேட்டால் உதவி ஆய்வாளர். அவர் எத்தனை பக்கம் வாக்குமூலத்தை எழுதினார் என்றால் தெரியாது. நான் சொல்ல சொல்ல உதவி ஆய்வாளர் அவரது பேனாவால் எழுதி கொண்டார் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் போலிசார் என்னிடம் எந்த வாக்குமூலத்தை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. இற்நத போன கலைவாணனும், நானும் ஒரே ஊரை சேர்ந்தவரா என்றால் ஆம். நான் சம்பவயிடத்திற்கு செல்லாமல் இறந்து போனவர் எனது ஊர்க்காரர் என்ற முறையில் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் எத்தனை மணிக்கு வந்தார்கள் எத்தனை மணிக்கு கிளம்பினார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**மறுவிசாரணை**- இல்லை.

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

V LAVANYA

Judicial Magistrate No. I,Chengalpattu
Digitally signed by V LAVANYA
Location: Chengalpattu
Date: 2024.07.15 17:39:58 +0530

Judicial Magistrate No.I,
Chengalpattu.